தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்டச் செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும்

பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மூலதனச் செலவினம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொலன்னறுவை மாவட்டத்தின் 07 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	முறையான வேலைத்திட்டமொன்றின் மூலம் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டுச் சரியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

(ஆ) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	பணிகள் நிறைவு செய்யப்படாத மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் I, II, III கட்டங்களுக்குரிய இதுவரையில் செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 2,024 மில்லியன் ஆக இருந்த போதிலும், நடைமுறை வேலையின் கீழ் ரூபா 1,893 மில்லியன் மட்டுமே கணக்கு	2018 ஆம் ஆண்டில் ITMIS Programme மேற்கொள்வதற்கு முன்னர் கணக்கு வைக்கப்பட்ட பெறுமதிகள் அதில் உள்ளடக்கப்படாமல்	உரியவாறு ஒப்பிட்டுச் சரிபார்த்துச் சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும்.

	வைக்கப்பட்டிருந்தமையினால், ரூபா 131 மில்லியன் இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டதுடன், அந்த வேறுபாட்டைக் கண்டறிவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இருந்ததன் காரணமாகக் கணக்கு வைக்கும் போது வேறுபாடு காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ii)	மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் III ஆம் கட்டத்திற்குரிய தளபாடம் கொள்வனவு செய்வதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 283 மில்லியன் செலவுக்குரிய விபரக்கூற்று, பொருட்கள் கையளிப்பு ஆவணங்கள் மற்றும் மதிப்பாய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக, செய்யப்பட்ட செலவுகள் குறித்து திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியாமல் போயுள்ளது.	III ஆம் கட்டத்திற்குரிய அளவிடைப் பத்திரத்தின் பிரதி இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.	செலவுகளை உறுதிப்படுத்துவதற்காக போதுமான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(iii)	மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாண பணிகளை ஒப்பந்தமிடப்பட்ட காலப்பகுதியினுள் நிறைவு செய்யாமை காரணமாகப் பின்னர் ஏற்பட்ட விலை அதிகரிப்பிற்காக, முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்கு முறையே ரூபா 39 மில்லியன், ரூபா 92 மில்லியன் மற்றும் ரூபா 23 மில்லியன் என மொத்தமாக ரூபா 155 மில்லியன் விலை வேறுபாடுகளுக்காகக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன், சம்பந்தப்பட்ட கணிப்பீடுகளின் பிழையின்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	பொறியியல் பிரிவினால் பற்றுச்சீட்டுப் பிரதிகள் இணைக்கப்பட்ட கோப்புகள் வழங்கப்பட்டிருந்தன.	விலை வேறுபாடுகளைப் பரிசீலனை செய்வதற்காக கணக்காய்வினால் கோரப்பட்ட அனைத்துச் சான்றுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6.1 (அ) பந்திக்கமைய கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையின் 1.6.1(அ) பந்தியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொது நிர்வாக அமைச்சின் 1997 ஜனவரி 13 ஆம் திகதிய 102 ஆம் இலக்க பிரதேச நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் பிரதேச செயலகங்களினால் வருமானச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணம், 1997 பெப்ரவரி 06 ஆம் திகதிய 351 இலக்கமுடைய அரசிறைச் சுற்றறிக்கையினால் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. மேலும், மீண்டும் 2001 மார்ச் 28 ஆம் திகதிய 359 இலக்கமுடைய அரசிறைச் சுற்றறிக்கையினால் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதுடன், அதற்கமைய, வருமானச் சான்றிதழ்களுக்காக 1997 பெப்ரவரி 06 ஆம் திகதிக்கு முன்னர் அறவிடப்பட்ட கட்டணம் 2001 மார்ச் 28 ஆம் திகதிக்குப் பின்னர் 1.265 சதவீதமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், பிரதேச செயலகங்களினால் 0.265 சதவீதம் குறைவாக வருமானச் சான்றிதழ்களின் மீது கட்டணங்கள் அறவிடப்பட்டதன் காரணமாக, 2024 ஆம் வருடத்தில் ரூபா 1.94 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	வருமானச் சான்றிதழ்கள் வழங்கும் போது, பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 1997 ஜனவரி 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட 97/02 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானத்தில் 1 சதவீதக் கட்டணம் அறவிடப்பட்டு வருமானச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அரசிறைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 351 ஆம் மற்றும் 395 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கைகளின் பிரகாரம் 1.27 சதவீதக் கட்டணம் அறவிடப்பட்டு வருமானச் சான்றிதழ்கள் வழங்குமாறு 2024 நவம்பர் 25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானச் சான்றிதழ்களுக்கான அறவிடப்படும் கட்டணம் சரியாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், முறையான பரிசீலனை செய்யப்பட்டு இழக்கப்பட்ட வருமானத்தைப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டிட நிர்மாணத்திற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டு நிதியில் 4 சதவீதத்திலிருந்து 54 சதவீதத்திற்கு இடைப்பட்டளவு தொகை எஞ்சியிருந்தது.	நிர்மாண நிறுவனத்தினால் செய்யப்பட்ட பணிகளின் பெறுமதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுக்குக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.	மதிப்பீடுகள் மிகவும் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், பிரதேசத்தின் அபிவிருத்திக்காக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 திசெம்பர் 29 ஆம் திகதிய இல. NPD/DCB/2024/GEN மற்றும் இல. MF/02/2023 கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம், சரியான கிராமிய அபிவிருத்தி அணுகுமுறையின் மூலம் பிரதேச வேறுபாடுகளைக் குறைத்து, நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்குதலை மூல நோக்கமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களில் இருந்து விலகிய 553 செயற்றிட்டங்களுக்காக ரூபா 70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.	மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயனுறுதிமிக்க செயற்றிட்டங்களுக்காகப் பயன்படுத்திச் சாதகமான பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்காமல் நோக்கத்திற்குப் புறம்பாகச் செயற்றிட்டங்களைத் தெரிவு செய்த தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையிலான செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மாவட்டச் செயலகத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காகச் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுப் பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன், அந்த முறைமையின் செயற்றிறன் குறித்து மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கமைய முறைமையைச் செயற்றிறன் மிக்கதாகக் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில் செயற்படுவதற்குக் குறித்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. .	சட்டத்தின் நியமங்களுக்கு இணங்கச் செயற்பட வேண்டும்.

	வேண்டும் என்பதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டதாகக் கூறும் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		
(ii)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் வகையில், குறித்த காலப்பகுதியினுள் அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் பதிலளித்தல் இடம்பெறுவதாகக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு வினாவிற்கு 2025 செப்டெம்பர் 16 ஆம் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 20.5 மில்லியன் ஆகக் காணப்பட்டது.	பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த காலப்பகுதியினுள் கணக்கீட்டு உத்தியோகத்தரின் விடயக்கூறல்கள் சகிதம் பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொலன்னறுவை மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளின் கட்டம் I, II, III இற்கான மாறும் செலவாக ரூபா 283 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மதிப்பீடுகளை மீறி 17 சதவீத மாறுபாட்டுச் சதவீதத்தால் நிர்மாண பணிக்களை மேற்கொள்வதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதி சமர்ப்பிக்கப்படவில்லை.	அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மீறும் போது, அதற்காக முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அந்த அனுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ)	மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணம் தொடர்பாக 03 கொடுப்பனவுச் உறுதிச்சீட்டுக்களுக்குரிய மொத்தம் ரூபா 12.99 மில்லியன் தொகையானது மாறுபாட்டுக் கட்டளைகளுக்கு அனுமதி அளிக்கப்படாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.	அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	கொடுப்பனவுகள் செய்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.6 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	05 வருடங்கள் கடந்த ரூபா 164 மில்லியன் மற்றும் 02 வருடங்கள் கடந்த ரூபா 32 மில்லியன் வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான பரிசீலனை செய்யப்பட்டு, வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.7 மிறை அறவீடு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	12/02 ஆம் இலக்க மற்றும் 2023 திசெம்பர் 01 ஆம் திகதிய கொடுப்பனவு உறுதிச்சீட்டினால் மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் II ஆம் கட்டத்திற்குரிய 36 ஆவது பற்றுச்சீட்டின் பிரகாரம் ரூபா 9.3 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவுச் சீட்டுக்குரிய பற்றுச்சீட்டின் பிரகாரம் மாறுபாடுகளின் திரண்ட பெறுமதி ரூபா 135.7 மில்லியன் ஆக இருந்த போதிலும், ரூபா 1 மில்லியன் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	II ஆம் கட்டத்திற்குரிய செயற்றிட்டத்தின் பணிகள் 100 சதவீதமும் பூர்த்தி செய்யப்படாததனால், இந்த மேலதிகக் கொடுப்பனவு குறித்துப் பரிசீலித்து, எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டில் இருந்தோ அல்லது இறுதிப் பற்றுச்சீட்டில் இருந்தோ	மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மேலதிகக் கொடுப்பனவிற்குரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சட்டத்தரணிகள் அலுவலகக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ஹிங்குரக்கொடை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள காணியை ஹிங்குரக்கொடைப் பிரதேச சபையிடம் கையளிப்பது தொடர்பாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று 2019 ஜூலை 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஹிங்குரக்கொடைப் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்தக் காணியைப் பிரதேச சபையிடம் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வளாகத்தைப் பிரதேச சபையிடம் கையளிப்பதற்கு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஆட்சேபனை இல்லை என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் காணியை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கையளிக்குமாறு எழுத்துமூலம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதனால், சட்டத்தரணிகள் சங்கத்தையும் பிரதேச சபையையும் அழைத்து இந்தக் சிக்கலுக்குத் தீர்வொன்றை வழங்குமாறு மாகாணங்களுக்கு இடையிலான காணி ஆணையாளரிடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு காணப்படும் இணக்கப்பாட்டிற்கமைய மூல நோக்கங்களுக்காகக் காணியைக் கையளிப்பதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘‘கம்திரிய’’ செயற்றிட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 160 கிராமிய அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அந்தக் கிராமிய அமைப்புக்களுக்கு ரூபா 517.7 மில்லியன் நிதி வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கிராமிய அமைப்புக்களை இனங்கண்டு, அவற்றின் மேற்பார்வைப் பணிகளை மாவட்டச் செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மேற்பார்வை இன்மை காரணமாகத் தற்போது சில அமைப்புக்கள் செயலிழந்திருந்தன.	கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திடம் தகவல் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது பிரிவுகள் மட்டத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மூலம் சங்கங்கள் இனங்காணப்பட்டு வருவதுடன், செயற்திறன் மிக்க சங்கங்களைக் கணக்காய்வுக்குட்படுத்திச் செயற்பாட்டுடன் பேணுவதற்கு முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	கிராமிய அமைப்புக்களை இனங்கண்டு, அவற்றின் மேற்பார்வைப் பணிகளை மாவட்டச் செயலகத்தின் மூலம் மேற்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், சம்பந்தப்பட்ட சங்கங்களை இனங்கண்டு அந்த சங்கங்களைச் செயற்திறனாக்குவதற்கும், வங்கிக் கணக்குகளில் மற்றும் பல்வேறு தரப்பினரிடம் காணப்படும் பணத்தை மீண்டும் அந்தச் சங்கங்களின் நோக்கங்களுக்காக வழிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இனங்காணப்பட்ட செயலிழந்த வங்கிக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 56.6 மில்லியன் ஆகக் காணப்பட்டது.		

4.2 எதிர்பார்த்த பெறுபேற்றினை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	''கம சமக பிளிசந்தர'' 2022 கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், குடும்ப அலகுகளுக்குக் கோழிக் குஞ்சுகளை வழங்குவதன் மூலம் கிராமிய மக்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துதல் மற்றும் முட்டை கொள்வனவு மூலம் குடும்பத்தின் போஷாக்கத்தை உயர்த்துதல் எனும் நோக்குடன், பொலன்னறுவை மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் மூலம் குடும்ப அலகுகளுக்கு ரூபா 11.6 மில்லியன் பெறுமதியான 28,797 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் ரூபா 09 மில்லியன் பெறுமதியான 22,265 கோழிக் குஞ்சுகள் உயிரிழந்ததன் காரணமாக, வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மீண்டுமொரு தடவை கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் 3,959 கோழிக் குஞ்சுகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன.	இது தொடர்பாக மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் தொடர்ச்சியாகப் பின் தொடரப்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் மிகுதிப் குஞ்சுகளையும் வரவழைத்து பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் செயற்றிட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்பட்டு வழங்குநரிடமிருந்து கோழிக் குஞ்சுகளைப் பெற்று வழங்குவதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் 2019/20 பெரும்போகம் தொடக்கம் 2022/23 பெரும்போகம் வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவுச் செயற்றிட்டங்களின் கீழ் அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற வேண்டிய 4,816,652 கிலோகிராம் அரிசியை வழங்காமை காரணமாக, ரூபா 395 மில்லியன் பணம் தொடர்ந்தும் நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது.	அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நெல் கொள்வனவு செய்து அரிசியைப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடு குறித்து முறையான விசாரணையொன்றை நடாத்தி, பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	எலஹர, ஹிங்குரக்கொடை, லங்காபுர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பேரேட்டுக் கணக்கு இலக்கம் - 9153 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 143.94 மில்லியன் பெறுமதியான காணிகளின் நிரந்தர உரிமை பிரதேச செயலரிடம் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	காணியைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	துரிதமாக நடவடிக்கை எடுத்து காணியின் உரித்தினை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 நட்டங்களும் இழப்புகளும்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொலன்னறுவை மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாண பணிகளை முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியை மீறி 06 வருட காலப்பகுதி கடந்திருந்த போதிலும், அதற்கான தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கட்டிடத் தொகுதி நிர்மாணத்தின் II ஆம் மற்றும் III ஆம் கட்டத்தின் போது கொடுப்பனவுகள் தாமதமானமை காரணமாக ரூபா 4 மில்லியன் தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தக்காரரால் அறவீடு செய்யப்பட்டிருந்தன.	ஒப்பந்த பணிகள் தாமதமாவதற்கான காரணங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தக் கால நீடிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளதனால், ஒப்பந்தக்காரரிடமிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான பரிசீலனை செய்யப்பட்டு, அசாதாரண தாமதங்களுக்காக ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் புதிய நிர்வாகக் கட்டடம் அமைப்பது தொடர்பாக 2019 ஜூன் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அத்தியாவசிய தளபாடம் கொள்வனவு செய்வதற்காக III ஆம் கட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1.8 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 26 எண்ணிக்கையான 02 அடுக்குக் கட்டில்களில் 06 கட்டில்களும் மற்றும் 52 மெத்தைகளில் 12 மெத்தைகளும் பாவனைக்கு எடுக்கப்படஷாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், 2023 ஆம் வருடத்தில் ரூபா 6.7 மில்லியனுக்குச் சமையலறை உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு பொருத்தியமை உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் அந்த உபகரணங்கள் பொருத்தப்படாமல் தேவைப்பாடுகளுக்காகப் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய அலுவலகத்தில், மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 28 நிறுவனங்கள் மற்றும் ஆலோசனையளிக்கும் நிறுவனங்கள் அமைக்கப் பிரேரிக்கப்பட்டுள்ளதனால், அந்த நிறுவனங்களின் சாரதிகளுக்காக இளைப்பாறும் அறைகளுக்குத் தேவையான கட்டில்களின் அளவு கட்டளையிடப்பட்டிருந்ததுடன், தற்போது உண்மையில் இளைப்பாறும் சாரதிகளின் எண்ணிக்கைக்குக் கட்டில்கள் ஒதுக்கப்பட்டு இளைப்பாறும் அறை தயாரிக்கப்பட்டு மிகுதி கட்டில்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அவை முறையான செயன்முறையின் மூலம் அரச அலுவலகங்கள் அல்லது நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சமையலறை உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், கடந்த காலப்பகுதியில் தேர்தல் கடமைகளுக்காகச் சிற்றுண்டிச் சாலை பயன்படுத்தப்பட்டமையால், பொருத்தும் பணிகள் தாமதமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் போது சிக்கனத்தன்மையின் மீது கவனம் செலுத்தித் தேவையான அளவிற்குச் சொத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

	கண உஉக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2000 ஆம் ஆண்டில் வெலிகந்தைப் பிரதேச செயலகத்தினால் "சுகநல சேவைகள் நிதியம்" எனும் பெயரில் பிரதேச செயலாளர் பிரிவின் மக்களின் சுகாதார வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகளை வழங்குதல் எனும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 11.23 மில்லியன் காணப்பட்டதுடன், அந்தப் பணம் நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் 24 வருட காலமாக வங்கியில் செயற்பாடற்று காணப்பட்டது.	இது தொடர்பாக 2025 பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெற்ற 2024 நான்காம் காலாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதற்கமைய 2025 பெப்ரவரி 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், இது தொடர்பாக ஆலோசனை கோரி 2025 மே 19 ஆம் திகதி கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஆலோசனை பெற்ற பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிதியங்களை ஸ்தாபித்து அவற்றின் நோக்கமிட்ட பணிகளை நிறைவேற்றாமல் மிக நீண்ட காலம் பணம் செயற்பாடற்று வைத்திருக்க நடவடிக்கை எடுத்த பொறுப்புக்கூற வேண்டிய சகல தரப்பினர் மீதும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நிதியத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்காகத் துரிதமாகத் தீர்மானங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	07 சமுர்த்தி சமூக அடிப்படைக் கடன் வங்கிகளில் அறவிடமுடியாக்கடன் வீதமானது 11.46 சதவீதம் தொடக்கம் 47.17 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீதத்தைக் கொண்டிருந்தது. இந்தக் அறவிடமுடியாக்கடனில் காணப்படும் முறைகேடான தன்மையைக் கொண்ட கடன்களை இனங்கண்டு அந்தக் கடன்களை அறவீடு செய்தல் மற்றும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணைகளை நடாத்தி, அவிடமுடியாக்கடனில் காணப்படும் முறைகேடான தன்மையைக் கொண்ட கடன்களை இனங்கண்டு அந்தக் கடன்களை அறவீடு செய்வதற்கும் மற்றும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களின் பதவியணித் தகவல்களின்படி, சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளில் 11 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்திலான பதவிகளில் 08 வெற்றிடங்களும், இரண்டாம் நிலை மட்டத்திலான பதவிகளில் 176 வெற்றிடங்களும் காணப்பட்டன.	வெற்றிடங்கள் தொடர்பாகத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பதவியணி தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொண்டு அத்தியாவசியமான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.